**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.161/2022**
**Prosecution Witness - PW7**

| | |
|---|---|
| Name | : திரு.டாக்டர் பென்ஜமின் ஜெபராஜ் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.02.2026

(Accused present.)

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் போதகர்(Tutor) ஆக பணியில் இருக்கிறேன். கடந்த 18.03.2020 அவ்வாறு பணியில் இருந்த போது, மணவாளக்குறிச்சி காவல் நிலைய கு.எண்.24/2020 வழக்கில் மாதிரிக்கு எடுக்கப்பட்டு ரசாயன ஆய்வுக்கு உட்பட்டு திருநெல்வேலி தடைய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தில் ஆல்கஹால் உடன் கூடிய அட்ரோபின் விஷத்தன்மை குறித்த விவரத்திற்கான மணவாளக்குறிச்சி காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தினை பெற்று, அறிக்கை வழங்கினேன். திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் அட்ரோபின் அளவு 100 மி.லி–ல் 9.8 மி.கி ஆக இருந்தது. அதை உட்கொள்ளும் போது எத்தில் ஆல்கஹாலின் விளைவுகளுடன் கூட வாய் உலர்ந்து போவது, கண்பார்வை மங்குவது, கண் கூசுவது, கண் வெளிப்படலம் இரத்தம் செறிந்து இருப்பது, உணவு விழுங்க முடியாமல் இருப்பது, படபடப்பு போன்றவை ஏற்படும். இரத்தத்தில் அட்ரோபின் அளவு 30 முதல் 150 மி.கி அளவிற்கு இருந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும். என்று கருத்துரை வழங்கினேன். அவ்வாறு நான் கொடுத்த அறிக்கை அ.சா.ஆ.9. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஆய்வு செய்த மதுவில் இருந்த 9.8 மி.கி. அட்ரோபின் அளவு மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாது என்றால், சரிதான். அவ்வகை மதுவை அதிகமாக குடிக்கும் போது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். அந்த மதுவில் இருந்த ஆல்கஹாலின் அளவு டாஸ்மாக் கடைகளில்

நிர்ணயித்துள்ள அளவு தான் என்றால், அது விபரம் எனக்கு சரியாக தெரியவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**